ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# வங்கிப் பரீட்சகர்கள் பதவிகள் (ஒப்பந்த அடிப்படை)

## கணக்கீடு/கணக்காய்வு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் திறைசேரித் தொழிற்பாடுகள் துறைகள்

### ❖ வங்கிப் பரீட்சகர் பதவி - கணக்கீடு/கணக்காய்வு

**பணிப் பொறுப்புக்கள்:**

- இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்ற உரிமம்பெற்ற வங்கிகளின் நியதிச்சட்டப் பரீட்சிப்புக்களை நடாத்துதல்.
- வங்கிகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தொடர்புடைய ஒழுங்குமுறைப்படுத்தல் ஏற்பாடுகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் தார்மீக நடைமுறைத் தத்துவம் என்பனவற்றின் நியதிகளுக்கமைவாக பரிகார வழிமுறைகளை பரிந்துரைத்தல் மற்றும் ஏற்பாடுசெய்தல்.
- நியதிச்சட்டப் பரீட்ச்சிப்புக்களில் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளின் நடைமுறைப்படுத்தல் மீது ஏனைய வங்கிப் பரீட்சகர்கள்/ மேற்பார்வையாளர்களுடன் ஒத்துழைத்தல்.
- உரிமம்பெற்ற வங்கிகளின் தொழிற்பாடுகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படும் ஒழுங்குவிதிகள் தொடர்பில் பங்குதாரர் வினவல்களுக்கு பதிலளித்தல்.
- எதிர்பார்க்கக்கூடிய எதிர்கால வங்கித்தொழில் முறைமையின் பாதிக்கப்படும்தன்மைகளைக் கணிப்பிடுதல் மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை உறுதிசெய்வதற்கு பரிந்துரைகளை ஆக்குதல்.
- பரிணமிக்கின்ற இடர்நேர்வுகளுக்கான பரீட்சிப்பு நுட்பங்களையும் தழுவல்களையும் மேம்படுத்துவதற்கு ஒழுங்குமுறைப்படுத்தல் வழிகாட்டல்கள், தொழிற்துறைப் போக்குகள், நிதியியல் சந்தை நிலைமைகள் என்பவற்றிலுள்ள மாற்றங்களுடன் இற்றைவரையானவராக இருந்தல்.
- இலங்கை மத்திய வங்கியின் பங்குதாரர்களுக்கான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு அமர்வுகளை நடாத்துதல்.
- தோற்றம்பெறுகின்ற இடர்நேர்வுகள் அல்லது ஒழுங்குமுறைப்படுத்தல் மாற்றங்கள் தொடர்புபட்ட விசேட கருத்திட்டங்கள், ஆராய்ச்சி அத்துடன் தரவுப் பகுப்பாய்வு என்பவற்றில் உதவுதல்.

**வேண்டப்படும் குறைந்தபட்ச கல்வி/ தொழில்சார் தகைமைகளும் அனுபவமும்:**

(அ) இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொண்ட கணக்கீட்டில்/வங்கித்தொழிலில்/நிதியில்/வியாபார முகாமைத்துவத்தில்/புள்ளிவிபரவியலில் குறைந்தபட்சம் 2ஆம் வகுப்பு (மேற் பிரிவு) அல்லது ஆகக்கூடிய 4.0 புள்ளிகளில் குறைந்தபட்சம் 3.5 தரப்புள்ளிச் சராசரியுடன் அல்லது குறைந்தபட்சம் 75% நிறையேற்றப்பட்ட சராசரிப்புள்ளிகளுடன் கூடிய சிறப்புப் பட்டம் (குறைந்தபட்சம் மூன்று (3) வருடங்கள்) பெற்றிருத்தல் வேண்டும்; அல்லது

(ஆ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் இணை உறுப்பினர் (CA Sri Lanka); அல்லது

(இ) ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் இணை உறுப்பினர் (CIMA-UK); அல்லது

(ஈ) பட்டய சான்றுபடுத்தப்பட்ட கணக்காளர்கள் அமைப்பின் இணை உறுப்பினர் (ACCA); அல்லது

(உ) ஐக்கிய அமெரிக்காவின் சான்றுபடுத்தப்பட்ட நிதிப் பகுப்பாய்வாளர் நிறுவனத்தின் பட்டயம் பெற்றவர் (CFA-USA); அல்லது

(ஊ) இலங்கை சான்றுபடுத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் இணை உறுப்பினர் (CMA-SL); அல்லது

(எ) உலகளாவிய இடர்நேர்வு தொழில்சார் நிபுணர்கள் அமைப்பிலிருந்து பெற்றுக்கொண்ட நிதியியல் இடர்நேர்வு முகாமையாளர் (FRM) தகைமை.

**அத்துடன்**

வங்கித்தொழில், நிதி, கணக்காய்வு மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பில் குறைந்தபட்சம் மூன்று (03) ஆண்டுகளைக் கொண்ட நிறைவேற்று வகிபாகம்.

### ❖ வங்கிப் பரீட்சகர் பதவி - தகவல் தொழில்நுட்ப இடர்நேர்வு

**பணிப் பொறுப்புக்கள்:**

- இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் உரிமம்பெற்ற வங்கிகளின் தகவல் பாதுகாப்பு, தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவம் அத்துடன் தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவம் பற்றிய தளத்திலான அல்லது தளத்திற்கு வெளியிலான மேற்பார்வை.
- தகவல் பாதுகாப்பு, தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவம் மீதான தொடர்புபட்ட ஒழுங்குவிதிகளின் மற்றும் வழிகாட்டல்களின் மேற்பார்வைக் கட்டமைப்பினை உருவாக்குதல் மற்றும் வகுத்தல்.
- இலங்கை மத்திய வங்கியில் மேற்பார்வைத் தொழில்நுட்ப (SupTech) மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தொழில்நுட்ப (RegTech) முயற்சிகளின் நடைமுறைப்படுத்தலுக்கு எண்ணக்கரு உருவாக்குதல் மற்றும் பங்களித்தல்.

**வேண்டப்படும் குறைந்தபட்ச கல்வி/ தொழில்சார் தகைமைகளும் அனுபவமும்:**

(அ) இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொண்ட கணனி விஞ்ஞானத்தில்/ தகவல்தொழில்நுட்பத்தில்/ தகவல் பாதுகாப்பில்/ இணையப் பாதுகாப்பில் குறைந்தபட்சம் 2ஆம் வகுப்பு (மேற்பிரிவு) அல்லது ஆகக்கூடிய 4.0 புள்ளிகளில் குறைந்தபட்சம் 3.5 தரப்புள்ளிச் சராசரியுடன் அல்லது குறைந்தபட்சம் 75% நிறையேற்றப்பட்ட சராசரி புள்ளிகளுடன் கூடிய சிறப்புப் பட்டம் (குறைந்தபட்சம் மூன்று (3) வருடங்கள்) பெற்றிருத்தல் வேண்டும் அல்லது கணனி விஞ்ஞானத்தில்/ தகவல்தொழில்நுட்பத்தில்/ தகவல் பாதுகாப்பில்/ இணையப் பாதுகாப்பில் முதுமானி அல்லது உயர்மட்ட (குறைந்தபட்சம் ஒரு (1) வருடம்) பட்டப்பின்படிப்பு பட்டம் பெற்றிருத்தல்.

**அத்துடன்**

கீர்த்திமிக்க நிறுவனமொன்றில் கணனி விஞ்ஞானம்/ தகவல்தொழில்நுட்பம்/ தகவல் பாதுகாப்பு/ இணையப் பாதுகாப்பு தொடர்புபட்ட ஆலோசனை, பொறியியல், கணக்காய்வு அல்லது இடர்நேர்வு முகாமைத்துவ வகிபாகத்தில் தகைமைக்குப் பிந்திய குறைந்தபட்சம் மூன்று (03) ஆண்டு அனுபவம்.

❖ வங்கிப் பரீட்சகர் பதவி - திறைசேரித் தொழிற்பாடுகள் மேற்பார்வை

**பணிப் பொறுப்புக்கள்:**

- திறைசேரிக் கொடுக்கல்வாங்கல்கள், உள்ளகக் கட்டுப்பாடுகள், ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள், திறைசேரி முறைமைகள் மற்றும் சந்தை நடத்தை உள்ளடங்கலாக உரிமம்பெற்ற வங்கிகளின் திறைசேரித் தொழிற்பாடுகள் மீது நியதிச்சட்டப் பரீட்சிப்புக்களை நடாத்துதல்.

**வேண்டப்படும் குறைந்தபட்ச கல்வி/ தொழில்சார் தகைமைகளும் அனுபவமும்:**

(அ) பின்வரும் தகைமைகளில் ஒன்றுடன் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொண்ட கணக்கீட்டில்/ நிதியில்/நிதி முகாமைத்துவத்தில்/வியாபார முகாமைத்துவத்துவத்தில்/பொது நிர்வாகத்தில்/வணிகத்தில் குறைந்தபட்சம் 2ஆம் வகுப்பு (மேற்பிரிவு) அல்லது ஆகக்கூடிய 4.0 புள்ளிகளில் குறைந்தபட்சம் 3.5 தரப்புள்ளிச் சராசரி ஒன்றுடன் அல்லது குறைந்தபட்சம் 75% நிறையேற்றப்பட்ட சராசரி புள்ளிகளுடன் கூடிய சிறப்புப் பட்டம் (குறைந்தபட்சம் மூன்று (3) வருடங்கள்) பெற்றிருத்தல் வேண்டும்;

i. நிதியியல் சந்தை அமைப்பிடமிருந்து (ACI-FMA) பெற்றுக்கொண்ட வணிக/ தொழிற்பாடுகள் சான்றிதழ் அல்லது டிப்ளோமா; அல்லது
ii. இலங்கை மத்திய வங்கியின் வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையத்திலிருந்து பெற்றுக்கொண்ட திறைசேரி மற்றும் வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகளில் டிப்ளோமா; அல்லது
iii. இலங்கை வங்கியாளர்கள் நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொண்ட திறைசேரி மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவத்தில் டிப்ளோமா; அல்லது
iv. ஐக்கிய அமெரிக்காவின் பட்டய நிதியியல் பகுப்பாய்வு நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொண்ட பட்டயம் பெற்ற நிதியியல் பகுப்பாய்வாளர் (CFA); அல்லது
v. உலகளாவிய இடர்நேர்வு தொழில்சார் நிபுணர்களின் அமைப்பிடமிருந்து பெற்றுக்கொண்ட நிதியியல் இடர்நேர்வு முகாமையாளர் (FRM) தகைமை.

**அத்துடன்**

தகைமைக்குப் பின்னர் குறைந்தபட்சம் மூன்று (03) ஆண்டு அனுபவம்

ஆங்கில மொழியில் தேர்ச்சிபெற்றிருத்தல் மேற்குறித்த பதவிகளுக்கான முன்தேவைப்பாடாகும். அபேட்சகர்களாக வரக்கூடியவர்கள் வலுவான வாய்மூல மற்றும் எழுத்துமூல தொடர்பூட்டல் திறன்களை எடுத்துக்காட்டுதல் வேண்டும் என்பதுடன் இப்பதவி சாத்தியமாக இரகசியமான மற்றும் உணர்வுத்திறன்மிக்க தகவல்களைக் கையாளுவதை வேண்டுகின்றது. தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதரிரிகள் வெளிப்படுத்தாமை உடன்படிக்கையொன்றைக் கைச்சாத்திடுமாறு வேண்டப்படுவர்.

**கல்வித் தகைமைகள் மற்றும் பணி அனுபவம் தொடர்பான சான்றிதழ்களை சமர்ப்பிக்குமாறு விண்ணப்பதாரிகளுக்கு கண்டிப்பான ஆலோசனை வழங்கப்படுகின்றது. மேற்குறித்த ஆவணங்களின் பிரதிகள் இணைக்கப்படாத ஏதேனும் விண்ணப்பம் ஆட்சேர்ப்பின் ஏதேனும் கட்டத்தில் எந்தவொரு அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்**

❖ **வயது:**

2024.02.15 அன்று 40 வருடங்கள் அல்லது அதற்குக் குறைவாகவிருத்தல்

❖ **தொழில்:**

மூன்று (03) வருடங்களுக்கு மேற்படாத காலப்பகுதிக்கு ஒப்பந்த அடிப்படையிலானது ஒப்பந்தம் தொடக்கத்தில் ஒரு ஆண்டுக்கு கைச்சாத்திடப்படுவதுடன் செயலாற்றுகையினை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் மீள்புதுப்பிக்கப்படும்.

❖ **ஊதியம் மற்றும் ஏனைய நன்மைகள்:**

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் என்பவற்றுக்கான பங்களிப்புகளுடன் ரூ.400,000 கொண்ட அனைத்தையுமுள்ளடக்கிய வரிவிதிக்கத்தக்க மாதாந்த ஊதியம்

## தேர்வு நடைமுறை

பொருத்தமான அபேட்சகர் நேர்முகப்பரீட்சையின்/நேர்முகப்பரீட்சைகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவார்.

## விண்ணப்பங்கள்

விண்ணப்பப் படிவங்களைச் இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம்செய்யலாம் https://www.cbsl.gov.lk/en/careers

குறித்துரைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினையே பயன்படுத்துமாறு விண்ணப்பதாரிகள் கண்டிப்பாக அறிவுறுத்தப்படுகின்றனர் என்பதுடன் உரியவாறு பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை வேண்டப்பட்ட அனைத்து ஆவணங்களுடனும் 2024.02.15 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பதிவுத் தபால் மூலம் மாத்திரம் மனித வளங்கள்/ பணிப்பாளருக்கு கிடைக்கும் விதத்தில் பின்வரும் முகவரிக்கு அனுப்புமாறும் வேண்டப்படுகின்றனர்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வங்கிப் பரீட்சகர்……………………….(ஒப்பந்த அடிப்படை) பதவிக்கான விண்ணப்பம்" எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

முடிவுத் திகதியன்று உள்ளவாறு வேண்டப்பட்ட தகைமைகளைக் கொண்டிராதவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க தகைமைபெறமாட்டர். தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்யாத, முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற அல்லது குறித்துரைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பிக்கப்படாத எந்தவொரு விண்ணப்பமும் எந்தவொரு அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

நேர்முகப் பரீட்சைக்கு முன்னர் நடாத்தப்படுகின்ற சான்றிதழ் உறுதிப்படுத்தலின் போது தொடர்புடைய ஆவணங்களின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பிக்கத் தவறுகின்ற அபேட்சகர்கள் எவ்விதத்திலேனும் தகைமையுடைய அபேட்சகர்களாகக் கருதப்படமாட்டார்.

எந்தவிதத்திலேனும் ஆதரவு தேடுதல் தகைமையிழக்கச் செய்யும்

ஆட்சேர்ப்பினைப் பிற்போடுவதற்கான/ இரத்துச் செய்வதற்கான உரிமையை இலங்கை மத்திய வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது. விண்ணப்பங்களை தெரிவட்டவணைப்படுத்துகையில் இலங்கை மத்திய வங்கியின் தேவைப்பாடுகளுக்கு பொருந்துகின்றவாறு அபேட்சகர்களின் கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவத்தில் உள்ளடக்கப்பட்ட விடயப் பரப்புகளின் தொடர்பினை தீர்மானிப்பதற்கு இலங்கை மத்திய வங்கி தற்றுணிபைக் கொண்டுள்ளது.

தெரிவு அட்டவணைப்படுத்தப்பட்ட அபேட்சகர்கள் மாத்திரம் ஆட்சேர்ப்பின் அடுத்த கட்டத்திற்கு தொடர்புகொள்ளப்படுவர்.

**பணிப்பாளர் - மனிதவளங்கள் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01**
**தொலைபேசி: 011-2477330 தொலைநகல்: 011-2477715**